1. IRC means

(A) Indian Red Cross (B) Indian Roads Congress

(C) Indian Road Certificate (D) Indian Resident Certificate

IRC என்பதன் விரிவாக்கம் ———————— என்பதாகும்.

(A) இந்திய செஞ்சிலுவை சங்கம் (B) இந்திய சாலைகளின் கூட்டமைப்பு

(C) இந்திய சாலைகளுக்கான சான்று (D) இந்திய குடிமக்களுக்கான சான்று

2. In respect of non salary items like Telephone charges, tools and plants all controlling officers may keep back a reserve of ————% to ————% of the total budget provisions.

(A) 5% – 10% (B) 10% – 15%

(C) 15% – 20% (D) 20% – 30%

ஊதியம் இல்லா செலவினங்களான தொலைபேசி கட்டணம், தளவாட சாமான்கள் போன்றவற்றிற்கு நிதி ஒதுக்கீடு செய்யும் கட்டுப்பாடு அலுவலர் மொத்த நிதி ஒதுக்கீட்டில் ————————%முதல் ————————% வரை இருப்பாக நிறுத்தி வைக்கலாம்

(A) 5% – 10% (B) 10% – 15%

(C) 15% – 20% (D) 20% – 30%

3. Minimum time limit for submission of tenders upto Rs. 2 crore in value ———— days.

(A) 7 (B) 15

(C) 20 (D) 30

இரண்டு கோடி வரை மதிப்புள்ள ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்பந்தபுள்ளி சமர்பிப்பதற்கான கால அவகாசம் ———————— நாட்கள் ஆகும்.

(A) 7 (B) 15

(C) 20 (D) 30

4. The Tenders remain valid for a period of less than ———— days from the last date for receipt of tender.

(A) 30 (B) 50

(C) 60 (D) 90

ஒப்பந்த புள்ளிகள் பெறப்பட்ட நாளிலிருந்து ———————— நாள் வரை காலாவதியாகாமல் இருக்கும்.

(A) 30 (B) 50

(C) 60 (D) 90

5. Minimum time limit for submission of tenders in excess of 2 crores of value ———— days.

(A) 30 (B) 50

(C) 60 (D) 70

இரண்டு கோடிக்கு மேற்பட்ட ஒப்பந்த புள்ளிகளை சமர்பிக்க கால அவகாசம் ———— நாட்கள் ஆகும்.

(A) 30 (B) 50

(C) 60 (D) 70

6. The Tender inviting authority shall have the notice inviting tenders published in the Indian Trade Journal in all cases where the value of procurement exceeds rupees

(A) 50 crores (B) 40 crores

(C) 30 crores (D) 10 crores

———— மேலுள்ள கொள்முதலுக்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரும் பொழுது ஒப்பந்தபுள்ளிகளை இந்திய வணிக இதழில் வெளியிட வேண்டும்.

(A) 50 கோடி (B) 40 கோடி

(C) 30 கோடி (D) 10 கோடி

7. The Tamil Nadu Transparency in tenders rule 2012 shall come into force on

(A) 26th November 2012 (B) 28th November 2012

(C) 26th December 2012 (D) 30th December 2012

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தபுள்ளிகள் விதிகள் 2012 ———— நாள் முதல் அமுலுக்கு வந்தது

(A) 26 நம்பர் 2012 (B) 28 நம்பர் 2012

(C) 26 டிசம்பர் 2012 (D) 30 டிசம்பர் 2012

8. The Tender rules will apply to all procurement for Public Private Partnership [PPP] projects of a value of more than rupees ———— by any procuring entity.

(A) 10 lakhs (B) 15 lakhs

(C) 20 lakhs (D) 25 lakhs

அரசு தனியார்துறை இணைந்து [PPP] செயல்படுத்தும் திட்டங்களுக்கான கொள்முதலில் ஒளிவுமறைவற்ற ஒப்பந்தபுள்ளிகள் விதிகள் ரூபாய் ———— மதிப்புக்கு மேற்பட்ட பொருட்களின் கொள்முதலுக்கு மட்டுமே பொருந்தும்.

(A) 10 லட்சம் (B) 15 லட்சம்

(C) 20 லட்சம் (D) 25 லட்சம்

9. ———— means the date on which the concession agreement comes into force and effect in accordance with the terms outlined there in.

(A) Appointed date (B) Due date

(C) Commencement date (D) Completion date

———— என்பது எந்த நாள்முதல் சலுகை வீத உடன்படிக்கை விதிகளுக்கு உட்படுத்தப்பட்டு நடைமுறைபடுத்தப்படும் நாள் ஆகும்.

(A) நியமன நாள் (B) கடைசி நாள்

(C) துவக்க நாள் (D) முடிவு நாள்

10. All measurements should be neatly taken down in a measurement book common Form No.

(A) 278 (B) 288

(C) 298 (D) 300

அனைத்து வேலைகளின் அளவீடுகளும் அளவு புத்தகம் படிவம் எண் ———— பதியப்படுகிறது.

(A) 278 (B) 288

(C) 298 (D) 300

11. The EMD of tenders who have not been selected will be released not later than ———— days.

(A) 90 (B) 80

(C) 60 (D) 50

ஒப்பந்தபுள்ளியில் பங்கேற்று ஒப்பந்தம் கிடைக்கப்பெறாத ஒப்பந்ததாரரின் பிணைவைப்பு தொகை ———— நாளுக்குள் திரும்ப வழங்கப்படல் வேண்டும்

(A) 90 (B) 80

(C) 60 (D) 50

12. The State Tender Bulletin Shall be published by the state Tender Bulletin officer atleast once in

(A) Every year (B) Every month

(C) Every week (D) Every day

மாநில ஒப்பந்தபுள்ளி செய்தி வெளியிடும் அலுவலர் ———— மாநில செய்தி அறிவிப்பு வெளியீட்டு இதழில் வெளியிட வேண்டும்.

(A) ஒவ்வொரு வருடமும் (B) ஒவ்வொரு மாதமும்

(C) ஒவ்வொரு வாரமும் (D) ஒவ்வொரு நாளும்

13. The Tenders shall be required to provide an EMD ordinarily not exceeding ———— percent of the estimated total project cost.

(A) One (B) Two

(C) Three (D) Four

ஒப்பந்ததாரர் ஒப்பந்தபுள்ளி கோரும் போது மொத்த மதிப்பீட்டில் ———— சதவீதத்திற்கு மிகாமல் பிணை வைப்பு தொகை செலுத்தப்படல் வேண்டும்.

(A) ஒன்று (B) இரண்டு

(C) மூன்று (D) நான்கு

14. Tenders may download the Tender document from the designated website at free of cost without any hindrance for open tender of value ———————— lakhs for construction.

(A) 20 (B) 10

(C) 5 (D) 2

———————— லட்சத்திற்கு மேலான கட்டுமான பணிகளுக்கான ஒப்பந்த நமுனாக்களை ஒப்பந்ததாரர்கள் இலவசமாக அதற்கென அனுமதிக்கப்பட்ட இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்

(A) 20 (B) 10

(C) 5 (D) 2

15. —————— means the private sector participant which has entered into a Public Private Partnership.

(A) Concessionaire (B) Contractor

(C) Corporate Body (D) Consumer

———————— என்பது தனியார்துறை நிறுவனமானது பொதுத்துறை நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்து தொழில் உடன்படிக்கையில் ஈடுபடும் போது இவ்வாறு அழைக்கப்படுகிறது.

(A) சலுகையாளர் (B) ஒப்பந்ததாரர்

(C) கார்ப்பரேட் நிறுவனம் (D) நுகர்வோர்

16. The TN Transparency in Tender Act 1998, come into force from —————— day of October 2000.

(A) $30^{th}$ (B) $20^{th}$

(C) $5^{th}$ (D) $1^{st}$

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தபுள்ளிகள் சட்டம் 1998, 2000 ம் ஆண்டு அக்டோபர் ———————— தேதி முதல் நடைமுறைக்கு வந்தது.

(A) முப்பதாம் (B) இருபதாம்

(C) ஐந்தாம் (D) முதல்

17. The competent authority to release the tender advertisement for a project of value above Rs. 50 lakhs shall be

(A) Director of information and public relation

(B) Director of Highways

(C) Chief Executive Engineer

(D) Chief Secretary

ரூ.50 லட்சம் மதிப்பிற்கு மேலுள்ள திட்டங்களுக்கு ஒப்பந்தபுள்ளி கோரும் விளம்பரங்களை வெளியிட தகுதியான அலுவலர் ————————ஆகும்.

(A) இயக்குநர் – தகவல் மற்றும் மக்கள் தொடர்பு துறை

(B) இயக்குநர் நெடுஞ்சாலை துறை

(C) தலைமை செயற் பொறியாளர்

(D) தலைமை செயலர்

18. When a payment made partly in cash and partly by cheque in Treasury a ———— chalan to be filled.

(A) single (B) separate

(C) duplicate (D) triplicate

கருவூலத்தல் தொகை செலுத்தப்படும் போது –பகுதி தொகையாகவும் (cash), பகுதி காசோலையாகவும் (cheque) செலுத்தினால் ————சலான் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

(A) ஒரே (B) தனித்தனி

(C) இரண்டு (D) மூன்று

19. When a treasury receives a cheque under subsidary rule 12 the tenderer shall be given a preliminary acknowledgement in Form ———— for the cheque only.

(A) 2 (B) 3

(C) 4 (D) 5

கருவூலத்தில் கருவூலவிதி 12ன்படி ஒப்பந்ததாரரிடமிருந்து காசோலை பெற்றப்பட்டால் ———— படிவத்தில் காசோலைக்கான ஒப்புதல் வழங்க வேண்டும்.

(A) 2 (B) 3

(C) 4 (D) 5

20. For every payment made by cash or cheque for service postage stamps issued by it, the treasury shall give a receipt in machine numbered Form

(A) 21 (B) 22

(C) 25 (D) 27

கருவூலத்தால் அரசு பணிக்கான அஞ்சல்வில்லைகளுக்காக தொகை வழங்கப்படும் போது ———— படிவத்தில் ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.

(A) 21 (B) 22

(C) 25 (D) 27

21. If a pension payable in Indian remains undrawn for more than ———— year, the pension shall cease to be payable.

(A) 5 years (B) 3 years

(C) 2 years (D) 1 year

இந்தியாவில் ————ஆண்டுகளுக்கு ஓய்வூதியம் பெறப்படாமல் (undrawn) இருந்தால் ஓய்வூதியம் ரத்து செய்யப்படும்.

(A) 5 ஆண்டுகள் (B) 3 ஆண்டுகள்

(C) 2 ஆண்டுகள் (D) 1 ஆண்டு

22. A gratuity payment order shall remain in force for ———— year only.

(A) one (B) three

(C) five (D) seven

———— ஆண்டுக்கு மட்டும் பணிக்கொடை வழங்குவதற்கான செயல்முறை ஆணை நடைமுறையில் இருக்கும்.

(A) ஒன்று (B) மூன்று

(C) ஐந்து (D) ஏழு

23. ——————— is an authority issued by the A.G. to regional deputy director of treasuries to effect recovery for the pay bill of an officer.

(A) Correction slip (B) Enfacement slip

(C) Pay slip (D) Retrenchment slip

——————— என்பது மாநில கலந்தாய்வு தலைவரால் கருவூல மண்டல துணை இயக்குநருக்கு ஒரு அலுவலரின் ஊதியப்பட்டியலிருந்து தொகை பிடித்தம் செய்ய கோரும் உத்தரவு ஆகும்.

(A) திருத்தச் சீட்டு (B) முகப்புச் சீட்டு

(C) சம்பள சீட்டு (D) குறைப்பு சீட்டு

24. Medical claims should be presented within ——————— months from the date of purchase of each bill.

(A) Two (B) Three

(C) Five (D) Twelve

மருந்துகள் கொள்முதல் செய்த பட்டியலை ——————— மாதங்களுக்குள் சமர்பிக்கப்படல் வேண்டும்.

(A) இரண்டு (B) மூன்று

(C) ஐந்து (D) பனிரெண்டு

25. ——————— means any procurement, which is less than rupees 25 lakhs in value for construction and which is less than rupees ten lakhs in value for all other categories of procurement inclusive of consultancies for constriction.

(A) Procurement (B) Low value procurement

(C) High value procurement (D) Purchase

——————— என்பது ரூ. 25 லட்சத்திற்கு கீழ் உள்ள கட்டுமான பொருட்களுக்கான கொள்முதலுக்கும் ரூ.10 லட்சத்திற்கும் கீழ் உள்ள இதர இனங்களுக்குமான கொள்முதலுக்கும்–கலந்தறிதல் நிறுவனங்கள் உட்பட

(A) கொள்முதல் (B) குறைந்த மதிப்புள்ள கொள்முதல்

(C) அதிக மதிப்புள்ள கொள்முதல் (D) வாங்குதல்

26. The certificate of Income Tax will be valid for ——————— year from the date of issue for all tenders made during this period of one year.

(A) one (B) two

(C) three (D) five

ஒப்பந்ததாரருக்கு வேலைகளுக்கு வழங்கப்படும் வருமானவரிச் சான்றானது ——————— வருட காலத்திற்கு மட்டுமே செல்லக் கூடியதாகும்.

(A) ஒன்று (B) இரண்டு

(C) மூன்று (D) ஐந்து

27. The limit of payment of petty bills by imprest holders on their own responsibility is fixed at

(A) Rs. 20 (B) Rs. 50

(C) Rs. 100 (D) Rs. 200

அலுவலக தலைவரால் சில்லறை செலவினத்திற்காக அனுமதிக்கப்படும் அலுவலக முன்பண தொகை ரூ. ———————— ஆகும்.

(A) ரூ.20 (B) ரூ. 50

(C) ரூ. 100 (D) ரூ. 200

28. The sale of condemned vehicles will be subject to confirmation by the ———————— of Tamilnadu.

(A) Chief Secretary (B) Transport Commissioner

(C) Finance Secretary (D) Chief Engineer

பயனற்ற வாகனங்களை விற்பனை செய்வதற்கு தமிழ்நாடு ———————— உறுதி ஆக்கம் அவசியமாகும்.

(A) தலைமை செயலர் (B) போக்குவரத்து ஆணையர்

(C) நிதித்துறை செயலர் (D) தலைமை பொறியாளர்

29. Excess issue of materials to contractor shall be charged at ———————— the issue rate.

(A) single (B) doubler

(C) triple (D) quadruple

ஒப்பந்ததாரருக்கு கூடுதலாக வழங்கப்பட்ட பொருட்களுக்கான கிரயத் தொகை பொருட்களின் மதிப்பில் ———————— மடங்கு வசூலிக்கப்படல் வேண்டும்.

(A) ஒரு மடங்கு (B) இரண்டு மடங்கு

(C) மூன்று மடங்கு (D) நான்கு மடங்கு

30. ———————— means the Chief Officer incharge of the revenue administration of a district.

(A) BDO (B) DRO

(C) Collector (D) Tashildar

———————— என்பது ஒரு மாவட்டத்தில் தலைமை வருவாய் அதிகாரி ஆகும்.

(A) வட்டாரவளர்ச்சி அலுவலர் (B) மாவட்ட வருவாய் அதிகாரி

(C) மாவட்ட ஆட்சியர் (D) வட்டாட்சியர்

31. ———————— issued by the Procuring Entity to the lowest tender in accordance with Rule 56

(A) Letter of credit (B) Letter of award

(C) Letter of debit (D) Letter of intent

————————என்பது குறைந்தபட்ச ஒப்பந்தபுள்ளி விதி 56–கீழ் கோரியவருக்கு பொருட்கள் கொள்முதல் செய்பவரால் வழங்கப்படும் உறுதி மொழியாகும்.

(A) கடன் சான்று (B) உரிமை ஆவணம்

(C) பற்று சான்று (D) கருத்து ஆவணம்

32. ———— means any submission required to be made to the tender inviting authority as per the tender documents.

(A) Response (B) Request

(C) Statement (D) Return

———— என்பது ஒப்பந்த விதிகளின்படி ஒப்பந்தம் கோரும் நிறுவனம் சில ஆவணங்களை சமர்பிக்க வேண்டும்.

(A) ஏற்புத்தன்மை (B) வேண்டுகோள்

(C) அறிக்கை (D) விவர அறிக்கை

33. All Tenders should be called on behalf of ———— of Tamil Nadu.

(A) Chief Minister (B) Chief Secretary

(C) Executive Engineer (D) Governor

தமிழ்நாட்டின் அனைத்து ஒப்பந்த புள்ளிகளும் ———— பெயரிலேயே வெளியிடப்படல் வேண்டும்.

(A) முதலமைச்சர் (B) தலைமை செயலர்

(C) நிர்வாக பொறியாளர் (D) ஆளுநர்

34. The Superior Officers should inspect all perishable stores once in a

(A) Half Year (B) Yearly

(C) Two years once (D) Three years once

சேதமடையும் பொருட்கள் (perishable) இருப்பை உயர் அலுவலர்கள் ————ஒருமுறை ஆய்வு செய்ய வேண்டும்.

(A) அரை ஆண்டுக்கு (B) வருடத்திற்கு

(C) இரண்டு வருடத்திற்கு (D) மூன்று வருடத்திற்கு

35. Balance in Official Assignees accounts not transacted for ———— completed financial year lapse to Government.

(A) Two (B) Three

(C) Five (D) Seven

Official Assignees கணக்கிலுள்ள இருப்பு தொகையானது ———— வருடங்கள் எந்த நடவடிக்கையும் (transaction) இல்லாமல் இருந்தால் காலாவதியாகிவிடும்.

(A) இரண்டு (B) மூன்று

(C) ஐந்து (D) ஏழு

36. A Government servant who receives any money on behalf of the Government shall give the payer a receipt in Form No.

(A) 102 (B) 103

(C) 105 (D) 107

ஒரு அரசு ஊழியரால் அரசு சார்பில் பெறப்படும் பணத்திற்கு படிவம் எண்————————ல் பணம் செலுத்துபவருக்கு ஒப்புகை வழங்கப்படல் வேண்டும்

(A) 102 (B) 103

(C) 105 (D) 107

37. The tender should be accepted from any person directly or indirectly connected with

(A) Govt. Service (B) Private Person

(C) Public (D) Politicians

நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ———————— சம்மந்தப்பட்ட நபரிடமிருந்து ஒப்பந்தபுள்ளிகள் பெறப்படக்கூடாது.

(A) அரசுப்பணி (B) தனிநபர்

(C) பொதுமக்கள் (D) அரசியல்வாதிகள்

38. Expenditure on petty construction and repairs connected with a building etc. if it exceeds Rs. 5,000 it classified under

(A) Major head (B) Minor head

(C) Sub head (D) Sub major head

ரூ. 5,000க்கு மேற்பட்ட கட்டிட கட்டுமானம் மற்றும் பராமரிப்புக்கான செலவினம் ———————— தலைப்பின் கீழ் கொண்டு வரப்படுகிறது.

(A) பெருந் தலைப்பு கணக்கு (B) சிறு தலைப்பு கணக்கு

(C) துணை தலைப்பு (D) சார்நிலை பெருந்தலைப்பு கணக்கு

39. ———————— the total of the consolidated fund accounts, contingency fund account and public account of the state.

(A) Civil Account (B) Contingency Account

(C) Government Account (D) Public Account

———————— என்பது எதிர்பாரா செலவுநிதி, தொகுநிதி மற்றும் பொதுக்கணக்கு மூன்றும் சேர்ந்து ஆகும்.

(A) சிவில் கணக்கு (B) எதிர்பாரா செலவுநிதி

(C) அரசுக் கணக்கு (D) பொதுக் கணக்கு

40. In accounts major heads introduced from ———— 1987.

(A) $1^{st}$ January (B) $31^{st}$ March

(C) $1^{st}$ April (D) $31^{st}$ December

கணக்கு நடைமுறையில் ————1987 முதல் பெருந்தலைப்புகள் (major heads) நடைமுறைபடுத்தப்பட்டது.

(A) ஜனவரி முதல் தேதி (B) மார்ச் 31ந் தேதி

(C) ஏப்ரல் முதல் தேதி (D) டிசம்பர் 31ந் தேதி

41. The present structure of classification of transaction in government account on a function cum programme/activity basis was introduced from ———— 1974.

(A) $1^{st}$ January (B) $28^{th}$ February

(C) $31^{st}$ March (D) $1^{st}$ April

தற்போது நடைமுறையிள்ள வகைப்படுத்தப்பட்ட அரசு கணக்கானது (Govt A/c)———— 1974 முதல் நடைமுறைபடுத்தப்பட்டது.

(A) ஜனவரி முதல் தேதி (B) பிப்ரவரி 28ந் தேதி

(C) மார்ச் 31ந் தேதி (D) ஏப்ரல் 1ந் தேதி

42. The allotment of land to, and recovery of cost of buildings, from the public sector under takings shall be at

(A) Capital value (B) Land value

(C) Fixed by Govt. (D) Market value

பொதுத்துறை நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிலம் மற்றும் கட்டிடங்களின் மதிப்பு ———— மதிப்பீட்டிலேயே பெறப்படுகிறது.

(A) மூலதன (B) நிலமதிப்பின்

(C) அரசால் நிர்ணயிக்கப்படுகிறது (D) சந்தை மதிப்பு

43. Transfer of land from one department of the Government to another Govt. Dept. shall be on a ———— basis.

(A) Profit and Loss (B) Market value

(C) No Profit and No Loss (D) Fixed price

நிலமானது ஒரு துறையிலிருந்து வேறு துறைக்கு ———— அடிப்படையில் மாற்றம் செய்யப்படுகிறது.

(A) லாபம் மற்றும் நஷ்டம் (B) சந்தை மதிப்பு

(C) லாபம் இல்லை மற்றும் நட்டம் இல்லை (D) நிலையான விலை

44. ———————— means the account of money's placed at the disposal of the Governor to enable advances to be made by him for meeting unforeseen expenditure.

(A) Civil account (B) Contingency fund

(C) Consolidate fund (D) Public account

————————என்பது சட்ட பேரவையில் ஒப்புதலை எதிர்பார்த்து அவசரத் தேவைக்கான செலவுகள் மேற்கொள்ளுவதற்காக மாநில ஆளுநரின் பொறுப்பில் உள்ள நிதியாகும்.

(A) சிவில் கணக்கு (B) எதிர்பாரா செலவுநிதி

(C) தொகுநிதி (D) பொதுக் கணக்கு

45. Muster Rolls should never be prepared in

(A) Duplicate (B) Single

(C) Quadriplicate (D) Triplicate

தினக்கூலி பணியாளர்களின் வருகை பதிவேடு ———————— நாள்களில் ஒரு போதும் பராமரிக்க கூடாது.

(A) இரண்டு (B) ஒரு

(C) நான்கு (D) மூன்று

46. ———————— is the administrative and technical head of the highways department.

(A) The Chief Engineer (B) The Superintending Engineer

(C) The Executive Engineer (D) The Junior Engineer

———————— நெடுஞ்சாலை துறையின் நிர்வாக மற்றும் தொழில்நுட்ப அதிகாரி ஆவார்.

(A) தலைமை பொறியாளர் (B) கண்கணிப்பு பொறியாளர்

(C) நிர்வாக பொறியாளர் (D) இளநிலை பொறியாளர்

47. ———————— is responsible for all important structural designs.

(A) The Chief Engineer (B) The Divisional Engineer

(C) The Junior Engineer (D) The Superintending Engineer

———————— முக்கியமான கட்டிட வடிவமைப்புகளுக்கு பொறுப்பாளர் ஆவார்.

(A) தலைமை பொறியாளர் (B) கோட்டப் பொறியாளர்

(C) இளநிலை பொறியாளர் (D) கண்காணிப்பு பொறியாளர்

48. ———— is the financial advisor to the Chief Engineer (Highways).

(A) Chief Accountant (B) Divisional Accountant

(C) Superintendent Accounts (D) Accounts Officer

நெடுஞ்சாலை துறையின் தலைமை பொறியாளருக்கு நிதி ஆலோசனைகளை வழங்குபவர் ———— ஆவார்.

(A) தலைமை கணக்காளர் (B) கோட்டக் கணக்காளர்

(C) கண்காணிப்பாளர் –கணக்குகள் (D) கணக்கு அலுவலர்

49. ———— means a primary record of all money transactions affecting the revenues of federation of any province as they occur.

(A) Accounts (B) Initial Accounts

(C) Final Accounts (D) Deposit Accounts

கூட்டாட்சி முறையில் மாகாணங்களிடையே நடைபெறும் பணப்பரிமாற்றங்களை குறித்து பராமரிக்கப்படும் கணக்கு ———— என்றழைக்கப்படும்.

(A) கணக்குகள் (B) முதன்மை கணக்கு

(C) இறுதி கணக்கு (D) வைப்பு கணக்கு

50. The gang Mazdoors retirement age is

(A) 58 (B) 60

(C) 62 (D) 65

தொகுதி வேலையாட்களின் ஓய்வு பெறும் வயது

(A) 58 (B) 60

(C) 62 (D) 65

51. Repairs may be divided into two classes ordinary and ———— repairs.

(A) Major (B) Minor

(C) Capital (D) Special

பழுதுபார்க்கும் வேலைகள் இரண்டு பிரிவாக குறிப்பிடப்படுகிறது. ஒன்று சாதாரணம் மற்றொன்று

(A) பெரிய (B) சிறிய

(C) மூலதன (D) சிறப்பு

52. ———— means the upto date quantities of work done or supplies made.

(A) Progress (B) Proforma

(C) Progress report (D) Completion

————என்பது தினசரி செய்யப்படும் வேலையின் அளவு மற்றும் பொருட்கள் விநியோக அளவை குறிப்பதாகும்.

(A) முன்னேற்றம் (B) முறையானபடிவம்

(C) முன்னேற்ற அறிக்கை (D) முடிவு

53. In road maintenance work – Estimates should be get ready and tenders invited before the end of

(A) April (B) March

(C) September (D) December

சாலை பராமரிப்பு சம்மந்தமான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ———————— மாதத்திற்குள் ஒப்பந்த புள்ளிகள் கோரப்படல் வேண்டும்.

(A) ஏப்ரல் (B) மார்ச்

(C) செப்டம்பர் (D) டிசம்பர்

54. Unused balances of materials at site should be verified at least ———————— a year in the manner prescribed in TNPWD Code.

(A) once (B) twice

(C) thrice (D) half yearly

தமிழ்நாடு பொதுப்பணித்துறை நடைமுறை நூலின்படி ஒரு வேலையில் பயன்படுத்தப்படாத பொருட்களின் மதிப்பு குறைந்தபட்சம் வருடத்தில் ———————— ஆய்வு செய்யப்படல் வேண்டும்.

(A) ஒருமுறை (B) இருமுறை

(C) மூன்றுமுறை (D) அரையாண்டுக்கு ஒரு முறை

55. ———————— common Form No. 476. This is a simple form of voucher intended to be used for all miscellaneous payments and advances.

(A) Challan (B) Hand Receipt

(C) Receipt (D) Acknowledgement

பல்வகை செலவினங்களுக்காக பராமரிக்கப்படும் பொதுவான படிவம் 476 ———————— என அழைக்கப்படுகிறது.

(A) சலான் (B) கைச் சரத்து

(C) ரசீது (D) ஒப்புதல் கடிதம்

56. The amount of the detailed estimate must not exceed the amount included in administrative approval by more than ———————— percent.

(A) 5 (B) 10

(C) 15 (D) 20

மதிப்பீடு தயாரிக்கும் போது நிர்வாக அனுமதியில் அளிக்கப்பட்ட தொகையினை விட ———————— சதவீதத்திற்கு மேல் கூடுதலாக அனுமதிக்க கூடாது.

(A) 5 (B) 10

(C) 15 (D) 20

57. In civil works bill ———————— percent of value added tax to be deducted and remitted to Commercial Tax Department.

(A) 1% (B) 2%

(C) 3% (D) 5%

சிவில் வேலைகளின் பட்டியல்களில் ———————— சதவீத மதிப்பு கூட்டுவரி (vat) பிடித்தம் செய்து வணிகவரித்துறைக்கு செலுத்தப்படல் வேண்டும்.

(A) 1% (B) 2%

(C) 3% (D) 5%

58. The approval of sanction to an estimate for the public work other than annual repairs will unless such work has been commenced, cease to operate after a period of ———————— years from the date upon which it was accorded.

(A) 3 (B) 5

(C) 6 (D) 7

நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட வேலைக்கான மதிப்பீடானது வேலை தொடங்கப்படாமல் இருந்தால் அனுமதி அளிக்கப்பட்ட நாளிலிருந்து ———————— வருடங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

(A) 3 (B) 5

(C) 6 (D) 7

59. ———————— means a payment made on a running account to a contractor for work done by him but not measured.

(A) Advance payment (B) Final payment

(C) Part payment (D) Petty payment

———————— என்பது ஒரு ஒப்பந்ததாரருக்கு வேலைகள் ஏதும் அளவீடு செய்யப்படாமல் வழங்கப்படும் தொகையாகும்.

(A) முன்பண தொகை (B) இறுதி தொகை

(C) பகுதி தொகை (D) சில்லரை தொகை

60. ———————— charges are these charges pertaining to a work, project or job which are incurred directly for its execution and are introduced in the regular accounts of it.

(A) Contingent (B) Direct

(C) Indirect (D) Petty

வேலைகளில் ———————— செலவினம் என்பது ஒரு திட்டம் அல்லது வேலையினை செயல்படுத்தும் போது நேரடியாக மேற்கொள்ளப்பட்டு முறைப்படி (regular) கணக்கு வைப்பதாகும்.

(A) எதிர்பாரா (B) நேரடி

(C) மறைமுக (D) சில்லறை

61. The security deposit of securities should be repaid after lapse of atleast ———— months from the date the employee vacated the post.

(A) 3
(B) 5
(C) 6
(D) 12

ஒரு பணியாளர் – பணி துறப்பு செய்தபின் அள்ளார் செலுத்திய பினை வைப்பு தொகையினை ———— மாதத்திற்கு பிறகு திரும்ப அளிக்காலம்

(A) மூன்று
(B) ஐந்து
(C) ஆறு
(D) பன்னிரெண்டு

62. In Part II of the account shall be recorded the transactions connected with the contingency fund setup by the Government of India or of a State under ———— of the constitution.

(A) Article 250
(B) Article 267
(C) Article 270
(D) Article 278

அவசரகாலநிதி பரிமாற்றங்களை தொடர்பான கணக்கு பகுதி II–இந்திய அரசியல் சட்டத்தின் ———— பிரிவின் அடிப்படையில் பதிவு செய்யப்படுகிறது.

(A) பிரிவு 250
(B) பிரிவு 267
(C) பிரிவு 270
(D) பிரிவு 278

63. Amounts realized by the sale of fruits etc. should be credited to ———— head.

(A) Major head
(B) Minor head
(C) Revenue head
(D) Stores head

பழங்கள் மற்றும் இதர பொருட்கள் விற்பனையில் கிடைக்கும் வருமானம் ———— தலைப்பில் வரவு வைக்கப்படுகிறது.

(A) பெருந்தலைப்பு
(B) சிறு தலைப்பு
(C) வருவாய் தலைப்பு
(D) கிடங்கு தலைப்பு

64. Expenditure on the construction or maintenance of work may be divided broadly into two main classes via

(i) Cash and (ii) ———— charges.

(A) Cheque
(B) Materials
(C) Stock
(D) Stores

கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வேலைகளின் செலவுகள் இரண்டு வகைப்படும் (i) ரொக்கம் மற்றும் (ii) ———— செலவினம்

(A) காசேலை
(B) பொருட்கள்
(C) இருப்பு
(D) கிடங்கு

65. ―――――――― means the last payment on a running account made to a contractor on the completion or determination of his contract and in full settlement of the account.

(A) First payment (B) Final payment

(C) Last payment (D) Part payment

―――――――― என்பது ஒப்பந்ததாரர் அவருக்கு ஒதுக்கப்பட்ட வேலையினை முழுவதுமாக முடித்தபின் வழங்கப்படும் தொகையாகும்.

(A) முதல் தொகை (B) இறுதி தொகை

(C) கடைசி தொகை (D) பகுதி தொகை

66. Balances in Official Assignees account are governed by ―――――――― rules.

(A) Government of India (B) Supreme Court

(C) State Government (D) High Court

Official Assignees கணக்கிலுள்ள இருப்பு தொகையானது ―――――――― விதிகளுக்கு உட்பட்டதாகும்.

(A) இந்திய அரசு (B) உச்சநீதிமன்ற

(C) மாநில அரசு (D) உயர் நீதிமன்ற

67. All the departments of Government including the public works department should maintain a register of immovable property in Form

(A) T.A. XVI (B) T.A. XVII

(C) T.A. XVIII (D) T.A. XX

பொதுப்பணித்துறை உட்பட அனைத்து துறைகளும் அசையா சொத்துகள் விபரங்களை ―――――――― பதிவேட்டில் பராமரிக்கப்படல் வேண்டும்.

(A) T.A. XVI (B) T.A. XVII

(C) T.A. XVIII (D) T.A. XX

68. The departmental officer should verify all the securities in ―――――――― every year.

(A) January (B) March

(C) April (D) May

கடனீட்டு ஆவணங்கள் (securities) துறை அலுவலர்களால் ஒவ்வொரு ஆண்டும் ―――――――― மாதத்தில் ஆய்வு செய்யப்படல் வேண்டும்.

(A) ஜனவரி (B) மார்ச்

(C) ஏப்ரல் (D) மே

69. In respect of deposits lodged with District Treasury the ———— should verify them and give a certificate.

(A) DTO (B) DRO

(C) DFO (D) Collector

மாவட்ட கருவூலத்திலுள்ள வைப்பு தொகைகள் (deposits) சரிபார்க்கப்பட்டு சான்றளிக்கப்படல் வேண்டும்.

(A) மாவட்ட கருவூல அலுவலர் (B) மாவட்ட வருவாய் அலுவலர்

(C) மாவட்ட வனத்துறை அலுவலர் (D) மாவட்ட ஆட்சியர்

70. Expenditure on a temporary assets cannot ordinarily be considered as expenditure of ———— nature.

(A) Ordinary (B) Capital

(C) Revenue (D) Assets

தற்காலிக சொத்துகளின் மீது மேற்கொள்ளப்படும் செலவினம் ———— செலவினமாக கருத இயலாது.

(A) சாதாரணம் (B) மூலதனம்

(C) வருவாய் (D) சொத்து

71. All fines realized by courts remitted into the treasury should be credited under the head

(A) 070 Other Administrative Service

(B) 2014 Administrative of Justice –Presidency Magistrates courts

(C) 0075 Miscellaneous general service

(D) 0029 Land Revenue

நீதிமன்றத்தால் விதிக்கப்படும் அபராத தொகை கருவூலத்தில் ———— தலைப்பில் செலுத்தப்படல் வேண்டும்.

(A) 070 இதர நிர்வாக தலைப்பு

(B) 2014 மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நிர்வாக தலைப்பு

(C) 0075 இதர பொது தலைப்பு

(D) 0029 நில வருவாய்

72. Budget allotment for refund of loans also lapse on

(A) 28th February (B) 31st March

(C) 1st April (D) 31st December

அரசு கடன்களுக்கான ஒப்பளிப்பும்–வரவு–செலவு–திட்டத்தில் குறிப்பிடப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் ———————ம் நாளன்று உயிரற்றவை ஆகிவிடும்.

(A) பிப்ரவரி 28 (B) மார்ச் 31

(C) ஏப்ரல் 1 (D) டிசம்பர் 31

73. Register of Recoveries –Every treasury should maintain a register of recoveries in ——————— TNTR–Cha VII–Page 324.

(A) Form 103

(B) Form 104

(C) Form 106

(D) Form 107

பிடித்தங்கள் பிதிவேடு –ஒவ்வொரு கருவூலத்திலும் ——————— படிவத்தில் பிடித்தங்கள் பதிவேடு பராமரிக்கப்படல் வேண்டும் TNTR–Cha VII–Page 324.

(A) படிவம் 103

(B) படிவம் 104

(C) படிவம் 106

(D) படிவம் 107

74. No subvouchers should be destroyed until ——————— years have elapsed from the date of payment.

(A) 2 (B) 3

(C) 4 (D) 5

துணை செலவுசீட்டுகள் அனைத்தும் தொகை வழங்கப்பட்டு ——————— ஆண்டுகளுக்கு பிறகே அழிக்கப்படல் வேண்டும்.

(A) 2 (B) 3

(C) 4 (D) 5

75. Bill for interdepartmental adjustments should be accompanied by chalans in Form 9B in

(A) Single (B) Duplicate

(C) Triplicate (D) Quadruplicate

ஒரு துறைக்கும் மற்றொரு துறைக்கும் இடையே சரிகட்டும் பட்டியல்கள் தயாரிக்கும் போது படிவம் 9B ———————— காப்பிகள் தயாரிக்கப்படல் வேண்டும்.

(A) ஒன்று (B) இரண்டு

(C) மூன்று (D) நான்கு

76. The receipt of any amount paid into a district treasury shall be signed by the

(A) Assistant Treasury office

(B) Sub Treasury office

(C) District Treasury office

(D) Treasury office

மாவட்ட கருவூலத்தில் செலுத்தப்படும் தொகைக்கு ———————— அலுவலர் ஒப்புதல் அளிக்கிறார்.

(A) உதவி கருவூல அலுவலர்

(B) துணை கருவூல அலுவலர்

(C) மாவட்ட கருவூல அலுவலர்

(D) கருவூல அலுவலர்

77. An officer of Highways department at the end of each month a consolidated receipt in Form ———————— for the whole of the remittances made during the period and send to the ATO with the remittance book.

(A) 22 (B) 21

(C) 20 (D) 12

நெடுஞ்சாலைதுறையில் ஒவ்வொரு நாளும் கருவூலத்தில் செலுத்தப்படும் தொகையில் தொகுப்பானது ———————— படிவத்தில் புவி கருவூல அலுவலருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

(A) 22 (B) 21

(C) 20 (D) 12

78. Cheque books required by officers of the Government are printed by the

(A) Press in Nasik

(B) TNPL

(C) Director of stationary and printing

(D) Private Press

அரசு செலவினங்களுக்கு தேவைப்படும் காசேலைகள் —————— அச்சகத்தில் அச்சிடப்படுகிறது.

(A) நாசிக் அச்சகம்

(B) அரசு காகித வேலை

(C) இயக்குநர் எழுதுபொருட்கள் மற்றும் அச்சகதுறை

(D) தனியார் அச்சகம்

79. Undisturbed pay, allowances and leave salary shall not under any circumstances be placed in —————— account.

(A) Advance (B) Deposit

(C) Suspense (D) Stores

கெபெடா ஊதியம், படிகள் மற்றும் விடுப்பு ஊதியம் எக்காரணத்தை கொண்டு —————— தலைப்பில் வரவு வைக்க கூடாது.

(A) முன்பணம் (B) வைப்பு

(C) விவரமில்லதா (D) பொருட்கள்

80. Lapsed deposit–Sanction payment authority issued by the Accountant General will be valid for —————— months only.

(A) One (B) Two

(C) Three (D) Four

மாநில கணக்காயரால் – காலம் கடந்த வைப்பு தொகைகள் திரும்ப வழங்குவதற்கு அளிக்கப்பட்ட ஒப்பளிப்பு ஆணை —————— மாதத்திற்கு மட்டுமே நடப்பில் இருக்கும்.

(A) ஒன்று (B) இரண்டு

(C) மூன்று (D) நான்கு

ROUGH WORK

ROUGH WORK